உ

சிவமயம்.





# கதிர்காமசுவாமி மெய்ஞ்ஞானமாலை.

ச. வல்லிபுரம் அவர்களால்

கொழும்பு, கொம்பனித்தெரு

ஸ்ரீஜம்பாள் அச்சு யந்திரசாலையில்

அச்சடிக்கப்பெற்றது.

உ
சிவமயம்.



# கதிர்காமசுவாமி மெய்ஞ்ஞானமாலை.

## வெண்பா.

சித்திதரும் புத்திதரும் செந்திருவைச் சேர்விக்கும்
பக்திதரும் மெய்ஞானம் பாவிக்கும்
யறுமுகனை யணைந்த அருணேசர் தந்த
கரிமுகனைக் கை தொழுதாக்கால்

கதிரமலைக் கந்தா கடம்பணியும் தோளா
எதிர் உருவரில்லாத எந்தாய்—உதிரடன்மு
அசுரர்குலம் சிதைத்த வாறதுபோல்
எந்தன் பவம் அகற்ற இப்போழுதே லா.

நானன்செயும் வினை தானென் செயும்யெனை நாடிவந்த
கோளன் செயுங் கொடுங் கூற்றன்செயுங் குமரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோழுங் கடம்பு மெனக்கு முன்னேவந்து தோன்றிடி னே.

## சுப்பிரமணிய சுவாமி துதி.

துய்யா சரணம் என்னையா சரணம், மெய்யானவேல்
முருகையா சரணம். உய்யார் மாமயில் எறிவந்தே ஏழை
உரைக்கும் தமிழுக்கு உதவி செய்யவேணும், ஒரு
மாங்கனியது வாங்கிட உலகம் தனைவலம் வந்திடும்— துய்யா.

## சரஸ்வதி துதி.

வாணி சரணம், கபாலி சரணம், சிலிவிலா சேந்திரசூலி சரணம், வானளந்தாளே சரஸ்வதியே இந்த வண்டமிழ் சொல்ல நல் வாக்குத் தரவேணும், மலர்தங்கிய பிரமன் வாணி திருவுள மிங்கித முடனே மகிழ்

## கதிர்மலைக் கீர்த்தனம்.

பல்லவி.

கண்டா லானந்தமே கதிர்
காமப் பதி வளர் கற்பூர தீபத்தைக் கண்டாலானந்தமே

அநுபல்லவி.

அண்டர் முனிவர்கள் கொண்டாடு மாடியில்
தொண்டர்கள் நின்று தொழுங் கதிர்காமத்தை கண்டா

சரணம்.

மாணிக்கக் கங்கையில் நீருமே யாடி
மகிழுந்து நாமும் தீபமும் எந்தி
ஆணிப் பொன் கோபுரத் தப்பனை வலம் வந்து
அரோகரா என்கிற ஆனந்தத் தாண்டவம். கண்டா

ஆனை மேலேறி அலங்கார மாகவே
அம்மை வள்ளியம்மை சந்நிதிக்கேகவே
கூடு மடியார் அரோகரா வென்கவே
கும்புட்டு ஆனந்தக் கூத்தாடும் காட்சிகள். கண்டா

வேண்டும் வரங்கள் அடியார்க்கு ஈந்துமே
வேலவர் தாமுமே கோவிலுக் கேகவே
தாண்டவ மாடி யடியார்கள் சூழவே
சன்னிதான மெங்கும் கற்பூர சோதியைக், கண்டா

இது கயிலாயம் என்று வணங்கிட
என்னப்பன் கோவிலுக்கேகியிருந்திட
கற்பகனார் வந்து பூசை புரிந்திட
கர்ம வினைகளும் அங்கு அகன்றிட. கண்டா

---

## (அருமருந் தொருதனி மருந் தேன்ற மெட்டு).

பல்லவி.

கதிரமலையில் மருந் தொன்றிருக்குது
கண்டாலே போதும்—உள்ளங்
கொண்டாலே தீரும் கதிரை

அநுபல்லவி.

மதியணி சங்கரன் தந்த மருந்து
மங்கை மனோன்மணி யீந்த மருந்து
கதியை யளித்துக் கலக்கும் மருந்து
கானக வேடர்க் கருளும் மருந்து — கதிரை

சரணம்.

அங்கிங் கெனு தெங்கும் நின்ற மருந்து
அசுரனும் சூரனை வென்ற மருந்து
கங்கையில் வந்து முளைத்த மருந்து
கடந்த வருள்ளத் துறைந்த மருந்து — கதிரை

துதி செய்யும் தேவரைக் காத்த மருந்து
துர்ச்சனர் தங்களுக் கெட்டா மருந்து
விதியை விலக்கி விதிக்கும் மருந்து
வேதன் அரிக்கும் அரிய மருந்து — கதிரை

வள்ளி தெய் வானைக்கு வாய்த்த மருந்து
மந்திரரூபமாய் நிற்கும் மருந்து
புள்ளிமயில்மிசை ஏறும் மருந்து
பொதிகை முனிக்கருள் புரியும மருந்து — கதிரை

அடி முடி யறியாத அகண்ட மருந்து
ஆனந்த மயமாகி நிற்கும் மருந்து
படிவுள்ள அடியார்க் கருள் தரும் மருந்து
பக்த ருள்ளம் பற்றிப் படரும் மருந்து — கதிரை

எம்மை யெந்நாளும் ரட்சிக்கும் மருந்து
எப்பொழுதும் முன் வந்தாளும் மருந்து
இம்மை மறுமையி லென்றுந் துணையாக
இருந்து பணிய உவந்த மருந்து — கதிரை

முன்செய் வினைகளைத் தீர்க்கும் மருந்து
மூட மதிகளைப் போக்கும் மருந்து
அன்பரை யண்டி யருளும மருந்து
அம் மருந்தே கெதியாகும் மருந்து — கதிரை

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும்
நினைக்கத் துதிக்கத் துலங்கும் மருந்து
என்றும் வணங்கும் மலர்த்தாளிது வன்றி
ஏதுமின் றென்று கொண்டாடும் மருந்து — கதிரை.

## கதிரைமலை யந்தாதி.

மேலான ஞானமும் நின்பூசை நேசமும் மெய்யடியார்
பாலான அன்பும் உயிர்மேல் கருணையும் பாவநினை
ஏலாத நெஞ்சும் எனக்கருள் செய்க விடுங் கதிரை
வேலா குருபரனே கலிகாலத்து மெய்த் தெய்வமே.

வினையைக் கடக்க உபாய மொன்றுண்டு இந்த மேதினியில்
மனையைப் பொருளையும் மண்ணை விரும்பு மவாவெடுத்து
நினையைத் தனையெனும் பற்று வைப்பீர் தென் கதிரைவரும்
புனையத்த மீராருடைய எம் புண்ணியன் பொன்னடிக்கே.

பொல்லாதபாசம் சுழற்றி எமன் வரும் போதினிலே
சொல்லாருமின்றி உன்றிரு நாமங்களேந்தத் துணைபுரிவாய்
வில்லார் திருநுதல் வள்ளியை வேண்ட விமலர் வரம்
எல்லாரு மேத்திப் பெறுங் கதிர்காமத் திறைவனே.

கள்ள மனத்தி னாசையும் நெஞ்சக் கடுவினையும்
எள்ளத்தனையு மிலாமல் காக்க இதுசமையம்
வள்ள புனத்தில் வெகு விந்தை செய்த வாலிபன் நீ
வெள்ளிக்கிழமை வருவாய் கதிரையில் வேலவனே.

---

## கதிர்காம சுவாமி ஆசிரிய விருத்தம்.

ஐயனே இவ்வுடலை அருமையாய்ப் பெற்றனன்
அரிய இப் பூமிதன்னில்
ஆங்கார முதலான துர்க்குணம் யாவுமே யடங்கிய
இப் பாழுடலையே
மெய்யாய் எடுத்தநாள் முதலாக யான் பெருமிடிமையை
அடைந்து வந்தேன்
மேலவர்கள் எங்கவே ஈடுளோர் பலரையும் விரைந்தேற்றிப்
போற்ற லுற்றேன்
ஐயா என் மிடிமையை யகலவும் செல்வமு
அமைவதெப்போ வறிகிலேன்
அகண்ட பரிபூரண அரன் மகா சண்முகா
அரிய செவ் வேலாயுதா
துய்யனே மெய்யர்க்கு மெய்யனே என் மிடிமை தொலைதற்கு
மருந்துன் னருளே
தோகை மயில் மீதேறி வந்திரட்சித்திடும்
துய்ய கதிர்காம வடிவே.

அன்றமரர் வெஞ்சிறை தீர்க்கவில்லையோ கொடிய
அசுரரை யடக்கவில்லையோ

அருந்தமிழ் முனிக் கருள் புரிந்திடவில்லையோ
ஆதிபரனுன தந்தை

தந்தனுக்கு உபதேச மருளவில்லையோ சச்சி
தானந்த மாகவில்லையோ

தரணி முழுவதையும் ஒரு மாங்கனிக்காகவே
தான்வலம் வருகவில்லையோ

குன்று நிலைகுலைய வேலேவி விடவில்லையோ
கோவிந்தராஜ மருகா

குமாரகுரு சரவணனந்தனே கந்தனே
குஞ்சரி குறத்தி காந்த

இன்றெனைக் கைவிடுதல் நீதியோ ஏழையே
னேந்துவது மவமாகுமோ

இழைவீரவாகுவோடு எண்மரும் சேவ்வசெயும்
எந்தலே கதிரைவேலே

திருவிதமாங் காரணங்களாளே செய்த தீவினையால் அனேகமது
சென்ன முண்டாம்

கருமவினைக் கீடாகக் காலன் வந்து கட்டுவான்
காலனென்னும் பாசத்தாலே

திரவியமும் பெண்டிர் மக்கள் சுற்றமெல்லாம் சேரவே
வருவதுவு மொன்றுமில்லை

கருவமையுங் குகையினிடம் போகாவண்ணம் கருணை
செய்தெனையாளுங் கதிரைவேலே.

அஞ்சு மூன்று அக்ஷரமே யனுதியாகும்
அதனாலே சடரூப மானதென்றும்

வஞ்சக நெஞ்சுடையோர்கள் அறியமாட்டார்
மாமறையோர் சொன்னமொழி யாருங் காணர்

பஞ்ச கோசத் தலேந்து நாளைப் போக்கி
பரமபத மறியாத பாவியானேன்

தஞ்சமென்று உனையடைந்தேன் எனையாட்கொள்ளும்
தயாபரனே பரமகுரு கதிரைவேலே.

அண்டருக்காகவே குன்றுருவ விட்டவேல்
அது எங்குபோய் விட்டதோ
ஆறுமுகமானவா பிரமனைச் சிறைவைத்த
அருள் எங்குபோய் விட்டதோ
மண்டலத்தே கும்பமாமுனிக்கு உபதேச
மருள்செய்தது எங்குற்றதோ
வரையதனை நிமிஷத்தில் சுற்றியே வந்த உன்
மயிலெங்கு போய்விட்டதோ
தொண்டருக் கிரங்கு நற்கருணையது எங்கையோ
துயில் கொள்ளுதோ விழிகளும்
சொல்லரிய கதிர்காமந் தன்னில் நீ இல்லையோ
தொல்லை நான் உறுகின்றதைக் கண்டு
உன்மனம் மிக இரங்கவில்லையோ கொடிய
கலிகால மாகையாலே
கர்த்தனே கைவிடேன் என் கவலை நீக்கியே
கருணை தந்தாழுவாய்.

---

## வேறு

கன்னிகைக ளிருவரையும் மணந்தவன் காண்
கானகத்தில் வேங்கைமர மானவன் காண்
பெண் ஒருதி அவாமென வந்தவன் காண்
பேயோடாடுபவர் புதல்வன்தான் காண்
மன்னுடர் தொழுதேற்றும் கதிர்காம மன்னவன் காண்
என்னுளும் என்மன முள்ளானே
ஆறுமுகன்காண் பன்னிரு கண்ணன் காண்
அழகுவேல் உடையவன் காண்
ஏறுமயில் வாகனன் காண்
எளியவர் துயர் தீர்ப்பவன் காண்
சீர்பெருகுங் கதிர்காமச் செல்வன்தான் காண்
சிவனவன்காண் என்னுளும் என்மன முள்ளானே.

## வேறு

ஆதியென்ற மணிவிளக்கை யறிய வேண்டும்
அகண்ட பரிபூரணத்தைக் காணவேண்டும்
சோதியென்ற தூயவெளி மார்க்க மெல்லாம்
சுகம்பெறவே மனோன்மணியின் ஆத்தாள் தன்னை

நீதியென்ற பரஞ்சோதி ஆயிர்பாதம்
நிற்குணத்தில் நின்றநிலை யாருங் காணார்
வேதியென்ற வேதாந்தத் துள்ளே நின்று
விளங்குவதும் பூசையது வீண்போகாதே.

ஆதிப்பிரமம் நகாரமது காலேயாகும்
அனாதிப் பிரமம் வகாரமது கண்ணேயாகும்
சோதிதரும் மகாரமதுவயிறே யாகும்
துலக்கமுள்ள சிகாரமது தோள்கை யாகும்
வீதிவரும் வகாரமது வாய் தானாகும்
விமலியுடை ஓங்காரம் மூலத்தாகும்
ஆதி பரை தசை கூரை புரம் பால் தாங்கி
அமர்ந்திட்ட கோயில் வகை யறிவாருண்டோ.

ஆதியப்பா மூலமது ஓங்கார வீடு
அப்பனே நகாரமது பிரமன் வீடு
சோதிதரும் மகாரமது திருமால் வீடு
துலக்கமுள்ள சிகாரமது உருத்திரன் வீடு
வீதி வரும் வகாரமது மகேசன் வீடு
வினையகன்ற யகாரமது சதாசிவன் தான்
பாதிமதி யமுதகலை தேங்கும் வீடு
பதிந்த மனம் மேலோர்க்கு பழுத்த வீடே.

குண்டலியாம் மூலசத்தி கணேசனுக்கு
குதித்தேறும் வாகனமோ ஆகுவானாள்
மண்ணுடைய பிரமனுக்கு அன்னமானாள்
மாயவனார் ஏறுதற்குக் கெருடனானாள்
தென் திசையில் ஈசனுக்கு இடபமானாள்
ஜெயம் பெற்ற மகேசனுக்கு யானையானாள்
அண்டசதா சிவத்துக்குக் குதிரை யானாள்
அம்மை சிவகாமி விளையாடல் காணே.

காணென்ற கணபதிக்கு வல்லபையுமானாள்
கலை வாணியாய் எழுந்தாள் பிரமனுக்கு
தேனென்ற திருமாலுக்கு லட்சுமியுமானாள்
தேவர் கோன் ருத்திரற்கு பார்பதியு மானாள்

ஏனென்ற மகேசற்கு மகேஸ்வரியு மானாள்
எழு நிலமுங் கடந்த சதாசிவத்துக் கப்பால்
நானென்றே மனோன்மணியாய் எழுந்து நின்றாள்
நாலிரண்டும் சத்தியுடை நடனந் தானே.

ஊறல் வந்து பாவு மடை தண்ணீல் மூழ்கி
உச்சிமலை மீதேறி மடையில் பூத்த
நறு மலர்தனை எட்டிப் பறித்துக் கொண்டு
நடு வீடு சென்று மணி மண்டபத்தில்
ஏறுமயிர்ப் பாலத்தில் நின்று கொண்டு
எம்மீசர் மேல் அம்மலரைச் சாத்த நீயும்
பேறு பெற்றாய் நெஞ்சகமே இந்தப் பேறு
பெற்றவர்க்குப் பிறவியும் உண்டென் காலமோ.

ஒன்றிரண்டு திங்களினில் கருவு மூறி
ஒரு மூன்று திங்களிலே ரூபமாகி
கன்று சதிர் ஐந்தில் இரு மூன்றில் தானும்
கருத்துடனே இடநாசி மார்புமாகி
என்றுரைத்த ஏழு திங்கள் எட்டுக்குள்ளே
எண்ணரிய நாதவிந்து உருவேயாச்சு
அண்ட பிண்டம் அடங்கமதாய் அமைத்தே யானும்
அலங்கார வீடாகச் சமைத்தேன் ஆண்டே.

நாலாச்சு ஆறாச்சு ஈரைந் தாச்சு
நலமான ஈராறு ஈரெட்டாச்சு
மேலான இரண்டாச்சு இதற்கப்பாலும்
வெளிகடந்து ஒன்றாச்சு ரூபமாச்சு
காலாச்சு கையாச்சு வயிறுமாச்சு
கட்டியொரு வீடாக சமைந்த வாறும்
சீலமுள்ள சிங்கார விசித வீட்டில்
சித்திரத்தில் பதுமையைப் போல்
ஜெனித்தே னாண்டே.

---

## பல்லவி

சூத்திரப் பாவையைக் கயிரற்று வீழுமுன்
சூக்ஷக் கயிற்றினைப் பாரடா — அதி
சூக்ஷக் கயிற்றினைப் பாரடா.

### அநுபல்லவி.

நேத்திரம் ரண்டிலும் நேரே யிலங்கிய
நீடொளி போன்றது தேடரிதாகிய
காத்திரமுள்ளது யாவும்பொதிந்தது
கையிலுங் காலினு மெட்டப்படாததோர் (கூ)

### சரணங்கள்.

1. சாத்திர வேதம் சதகோடி கற்றாலும்
சமயநெறிகளி னாசாரம் பெற்றாலும்
பாத்திர மேந்திப் புறத்தி லலைந்தாலும்
பாவனை யாலுட லுள்ள மலைந்தாலும்
மாத்திரைப் போது மெமன்வரு மப்போது
மற்றொன் றுதவா துதவா துதவாது
சூத்திரமாகிய தோணி கவிழுமுன்
சுக்கானை நேர்படுத் திக்கணமே சொன்னேன் (கூ)

2. உற்றுற வின்முறையார் சூழ்ந் திருந்தென்ன
ஊருடன் சனங்க ளெல் லாரும் பணிந்தென்ன
பெற்றாரும் பெண்டிரும் பிள்ளை யிருந்தென்ன
பேணும் பெருஞ் செல்வ லாணவத் தாலென்ன
கத்தன் பிரிந்திடச் செத்த சவமாச்சு
காணாது காணாது கண்டதெல்லாம் போச்சு
எத்தனைபேர் நின்று கூக்குர லிட்டாலும்
எட்டாமற் போய்விடுங் கட்டையல்லோ வித்தச் (கூ)

3. மாயப் பிறவி வலையை யடைக்கிட
மாறாத் தியானம் மனத்தி னினைத்திட
காயாபுரிக் கோட்டை கைக்கு ளகப்பட
காணா மணிச்சுடர் தானே விளங்கிட
ஆயு மறிவுடன் யோகத்தினா லெழும்
ஆனந்தத் தவனையுண் டன்புடனே தொழும்
தாயா யுலகத்தை யீன்றகுணங்குடித்
தற்பரனைக் கண்டு அன்புடனே சென்று (கூ)

---

## திருப்புகழ்.

இறவாமல் பிறவாமல் எனையாட்சற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக்கிளை யோனே கதிர்காமப் பெருமானே.

உ

சிவமயம்.

# கந்தர்சஷ்டி கவசம்.

## காப்பு.

நேரிசை வெண்பா.

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பாலித்து—கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடு நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

அமரரிடர்தீர அமரம்புரிந்த
குமரனடி நெஞ்சேகுறி.

சஷ்டியை நோக்கச் சரஹண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய னடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேகக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவ னித்தம் வருக
சிரகிரிவேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹணபவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவசரஹ வீரா நமோ நமோ
நிபவ சரஹண நிறநிற நிறெண
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையிற்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்

பாந்த விழிகள்பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உயியொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொழிரும்
சண்முகன் றீயும் தனியொழி வொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன் றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவரும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாவும்
நன்னெறி நெற்றியு னவமணிச் சுட்டியும்
ஈரா று செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ந மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிற் றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்நம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகு டிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்குடிங் குகுகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேண் முந்து
என்றனை யாளும் ஏரகச்செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவி நோதனென்
றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ந வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அணிவேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டு முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் மெனை யெதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வயிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க

பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்களும்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புறக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக்ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துணைச் சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணருங்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூத ரெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகை சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெறி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியு நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோட

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து யரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்புஞ்சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தாணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்காய்
மண்ணா ளரசரும மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திரு நாமம்
சரஹன பவனே சைலோளி பவனே
திரிபுர பவனே திகழோளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேள் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத் துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பாலகன் குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமக ணன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் விபூதியை
நேசமுடன் யான் நெற்றியி லணிய
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்

சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைக ணீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தால்
பெற்றவ னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீது மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் றேவ ராயன்பகர்ந் ததைக்
காலையின் மாலையிற் கருத்துட னாளும்
ஆசாரத் துடன் அங்கந் துலக்கி
நேசமுட னொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனை
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாண் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித் துகந்து நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல் தந்தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோண் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெளில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத்தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடி பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்

சின்னக் குழந்தை சேவ்டி போற்றி
　　எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறவும் வேலவ போற்றி
　　தேவர்கள் சேனபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
　　திறமிகு திவ்ய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
　　கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
　　உயர்கிரி கனக சபைக்கோ ராசே
மயிலட மிடுவோய் மலரடி சரணம்
　　சரணஞ் சரணம் சரஹண பவஒம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்.

---

## புராணம்.

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய் போற்றி
முன்னிய கருணையாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னியர் இருவர்நீங்காக் கருணைவாரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி

பிறப்பது மிறப்பதும் பெயருஞ் செய்கையு
மறப்பது நினைப்பதும் வடிவும் யாவையும்
துறப்பது மின்மையும் பிறவுஞ் சூழ்கலாச்
சிறப்புடை யரனடி சென்னி சேர்த்துவாம்.

பூமலர் மிசைவரு புனித னாகியோர்
தாமுணர் வரியதோர் தன்மை யெய்தியே
மாமறை முதற்கொரு வடிவமாகியோன்
காமரு செய்யபூங் கழல்கள் போற்றுவாம்.

## வேண்டுதல்.

ஏற்றிடல் வேண்டு மிப்பாடல்களெல்லா மெண்ணிநிதம்
போற்றிடு மன்பர்க் கருளவும் வேண்டு மென்புன்மையெலாம்
மாற்றிடல் வேண்டும் பழவினைநீக்கி பரிவுடனே
தோற்றிடல் வேண்டு முயிர்விடும்போதென் துணைவிழிக்கே.

கதிர்காமசுவாமி மெய்ஞ்ஞானமாலை முற்றிற்று.